## வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.299/ஆ2/2026 நாள். .01.2026

-----

பொருள்: பள்ளிக் கல்வி – சார்நிலைப் பணி – வேலூர் மாவட்டம், வேலூர் மாவட்டம் முதன்மைக்கல்வி அலுவலரின் ஆளுகையின் கீழ் செயல்படும் அலுவலகங்கள்/பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு பணிமாறுதல் மூலம் கலையாசிரியராகப் பணிமாறுதல் வழங்குதல் – 01.01.2026 நிலவரப்படி தகுதிவாய்ந்தோர் விவரங்களை அனுப்ப கோருதல் – சார்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண் 283 பள்ளிக் கல்வித் (எம்1) துறை நாள் 03.11.2009.
2. அரசாணை (நிலை)எண் 76 பள்ளிக் கல்வித் (ப.க.3(1)) துறை நாள் 10.04.2015.
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி சார்நிலைப்பணி விதிகள் அரசாணை (நிலை) எண்.13 பள்ளிக்கல்வி (ப.க.3(1))த்துறை 30.01.2020.
4. அரசாணை (நிலை) எண்.20, மாற்றுத்திறனாளிகள் (DAP–3.2) நலத்துறை, நாள்: 20.06.2018.
5. அரசாணை (நிலை) எண்.06, மாற்றுத்திறனாளிகள் (DAP–3.2) நலத்துறை, நாள்: 21.06.2025.
6. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறை ந.க.எண்.4304/சி5/இ2/2026 நாள்: 20.01.2026.

-----

தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையில் (தொடக்கக் கல்வி உட்பட) பணிபுரியும் ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு பணிமாறுதல் மூலம் 20% கலையாசிரியராக பணிநியமனம் வழங்க பார்வையில் காணும் அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசிரியரல்லாப் பணியாளர்களில் பதவி வாரியாக பணிமாறுதல் மூலம் பணிநியமனம் வழங்க பார்வை (3)இல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1) உதவியாளர் | 4% சதவிதம் |
| 2) இளநிலை உதவியாளர் | 4% சதவிதம் |
| 3) ஆய்வக உதவியாளர் | 3% சதவிதம் |
| 4) பதிவறை எழுத்தர் | 2% சதவிதம் |
| 5) அலுவலக உதவியாளர் | 2% சதவிதம் |
| 6) காவலர் | 2% சதவிதம் |
| 7) நூலகர் | 3% சதவிதம் |
| மொத்தம் | 20% சதவிதம் |

அரசாணை (நிலை) எண்.20, மாற்றுத்திறனாளிகள் (DAP–3.2) நலத்துறை, நாள்: 20.06.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.06, மாற்றுத்திறனாளிகள் (DAP–3.2) நலத்துறை, நாள்: 21.06.2025–இன்படி, மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016–இன் படி பதவி உயர்வில் கீழ்காணும் விவரப்படி இடஒதுக்கீடு வழங்கவும் வகைசெய்யப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

| DISABILITY | PERCENTAGE OF RESERVATION |
|---|---|
| a) Blindness and low vision | 1% |
| b) Deaf and hard of hearing | 1% |
| c) Locommotor disability including Cerebral palsy, Leprosy cured, Dwarfism, Acid attack victims and Muscular Dystrophy | 1% |
| d) Autism, Intellectual Disability, Specific Learning Disability, mental illness. | 1% |
| e) Multiple disabilities from amongst persons under clauses (a) to (d) including deaf–blindness | |

மேற்குறித்த மாற்றுத்திறனாளி பிரிவினர் எவரும் கீழ்காணும் கல்வித் தகுதியினை பெற்றிருப்பின் அவர்கள் சார்பான விவரத்தினை படிவம் 2–இல் பதிவு செய்து அதற்கான அத்தாட்சி சான்றின் நகலினை சார்ந்த அலுவலர் சான்றொப்பமிட்டு அனுப்பி வைக்க வேண்டும்.

பார்வை (3)இல் காணும் அரசாணையில் கலையாசிரியருக்கான கல்வித்தகுதிகள் கீழ்வருமாறு : –

1. General Qualification.–

A Pass in +2 under 10+2 pattern and

2. Technical Qualification.–

Degree with Drawing and Painting of a recognised University in the State approved by UGC or its equivalent or Diploma in Painting or Diploma in Drawing of Annamalai University or A Diploma in Paintings or Commercial Arts or Modelling of the Government College of Arts and Crafts or Government Technical Examinations (Higher Grade) in Free Hand Outline and Model Drawing or Government Diploma in Drawing or a Certificate issued by the Tamil Nadu Institute of Architecture and Sculpture, Mamallapuram: and Technical Teachers Certificate;

(or)

A Diploma in Fine Arts, awarded by the Director of Technical Education or a Degree in Fine Arts awarded by the Madras University or the Bharathiyar University or any other equivalent Diploma / Degree in Fine Arts issued by other Universities and boards recognised by University Grants Commission.

Provided that the educational qualification 10+2 prescribed shall not apply to the candidates passed SSLC prior to 2005 and successfully undergone the Technical Teachers Certificate examination conducted by the Director of Government Examinations, Tamilnadu.

பணிமாறுதல் மூலம் கலையாசிரியர் பணிநியமனம் வழங்குவது சார்ந்து 01.01.2026 நிலவரப்படி மேற்காண் கல்வித்தகுதிகளை பெற்று பள்ளிக்கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களில் தகுதிவாய்ந்த ஆசிரியரல்லாத பணியாளர்களான (உதவியாளர், இளநிலை உதவியாளர், ஆய்வக உதவியாளர், பதிவறை எழுத்தர், அலுவலக

Scanned with OKEN Scanner

உதவியாளர். காவலர்,. நூலகர்) ஆகிய பதவியில் பணிபுரியும் பணியாளர்கள் சார்பான விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் 1 மற்றும் படிவம் 2இல் பூர்த்தி செய்தும் அதற்குரிய ஆவணங்களுடன் (பணிபதிவேட்டுடன்) 31.01.2026க்குள் இரு நகல்களை இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :- படிவம் 1 & 2.

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

28/1/26

பெறுநர்,

1. கூடுதல் முதன்மைக்கல்வி அலுவலர் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, வேலூர்.
2. மாவட்டக்கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி, தொடக்கக்கல்வி, தனியார் பள்ளிகள்)
   மாவட்டக்கல்வி அலுவலகம்,
   வேலூர்.
3. அனைத்து அரசு/நகரவை/ உயர்/ மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் உடன் நடவடிக்கைக்காக அனுப்பலாகிறது.

நகல்,
கோப்பிற்கு

Scanned with OKEN Scanner